# கிராமிய சேவைத் திட்டம்

---

கோயம்புத்தூர் மண்டலம்

பெரியநாயக்கன்பாளையம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை

பெரியமத்தம்பாளையம் கிராமம்

---




## (WCSC-VSP) கிராமிய சேவைத் திட்டத்தின் இலக்கு

- நோயற்ற வாழ்வு
- கல்வியில் மேன்மை
- சுற்றுப்புற சுகாதாரம்
- முதியோரைப் பாதுகாத்தல்
- மகளிர் மேம்பாடு
- குடும்ப அமைதி
- கர்மயோக வாழ்க்கைநெறி
- மனிதநேயம்
- மதநல்லிணக்கம்
- சமுதாய விழிப்புணர்வு

**தூய்மையும் பசுமையும் மிக்க ஆரோக்கியமான அமைதி கிராமம்**

# கோயம்புத்தூர் மண்டலம்
# பெரியநாயக்கன்பாளையம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை
# பெரியமத்தம்பாளையம் கிராமம்

## Contents


1. செயல்பாட்டு அறிக்கை ..... 3
2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம் ..... 4
3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும் ..... 4
4. பெரியமத்தம்பாளையம் கிராமத்தின் தொடக்கவிழா ..... 5
5. மருத்துவ முகாம் ..... 7
6. மனநல ஆலோசனை முகாம் ..... 7
7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம் ..... 7
8. ஆரோக்கிய மேம்பாட்டு முகாம் (மது ஒழிப்பு முகாம்) ..... 8
9. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி ..... 8
10. முதல் நிலை அகத்தாய்வு ..... 9
11. இரண்டாம் நிலை அகத்தாய்வு ..... 9
12. மூன்றாம் நிலை அகத்தாய்வு ..... 9
13. அனுபவ உரை - Result Inference ..... 10
14. எதிர்காலத் திட்டங்கள்: ..... 16
15. வாழ்த்து: ..... 16

## 1. செயல்பாட்டு அறிக்கை

| S.No | Description | Information | | |
|---|---|---|---|---|
| 1. | கிராமத்தின் பெயர் | பெரியமத்தம்பாளையம் | | |
| 2. | கிராமிய சேவைத் திட்டம் தொடங்கிய நாள் | **18-05-2025** | | |
| 3. | கிராமிய சேவைத் திட்டம் நிறைவுநாள் | **28-10-2025** | | |
| 4. | கிராமிய சேவைத் திட்டம் காலம் | **5** மாதங்கள் | | |
| 5. | மண்டலம் | கோயம்புத்தூர் | | |
| 6. | அறக்கட்டளை | பெரியநாயக்கன்பாளையம் | | |
| 7. | நிதி உதவி வழங்கியவர் | *DR.R.Mogan, Vice President, PR, PNP MVKM Trust & PNP MVKM Trust Members* | | |
| 8. | கிராம மக்களின் மொத்த எண்ணிக்கை | ஆண்:950 | பெண்:1050 | மொ:2000 |
| 9. | கிராமத்தில் உடற்பயிற்சி கற்றவர்கள் | ஆண்:182 | பெண்:446 | மொ:628 |
| 10. | காயகல்ப பயிற்சி கற்றவர்கள் எண்ணிக்கை | ஆண்:136 | பெண்:386 | மொ:525 |
| 11. | தவம் பயின்றவர்களின் எண்ணிக்கை | ஆண்:136 | பெண்:386 | மொ:525 |
| 12. | முதல் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:80 | பெண்:250 | மொ:330 |
| 13. | இரண்டாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:75 | பெண்:235 | மொ:310 |
| 14. | மூன்றாம் நிலை அகத்தாய்வு பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:70 | பெண்:235 | மொ:305 |
| 15. | பிரம்மஞானம் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:14 | பெண்:25 | மொ:39 |
| 16. | ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் | ஆண்:03 | பெண்:03 | மொ:06 |
| 17. | உடற்பயிற்சி பயின்றவர்கள் *(Students below 14)* | ஆண்:79 | பெண்:65 | மொ:144 |

## 2. கிராமிய சேவைத் திட்டத்தின் நோக்கம்

பாமர மக்களின் தத்துவஞானி அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஏழை, எளிய மக்களும் ஆன்மிக அறிவைப்பெற்று அதன் மூலம் உடல் நலம், உயிர்வளம், மனவளம், நட்பு நலத்துடன் துன்பமில்லா இன்பமான வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்வின் நோக்கமான இறைநிலையை உணர்வதற்கான வழிமுறைகளை வழங்கி உள்ளார்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களின் குறிக்கோள் உலக அமைதி. தனிமனித அமைதியின் மூலமே உலக அமைதி பெறமுடியும் என்பது மகரிஷியின் திண்ணமான எண்ணமாகும். மகான் அவர்கள் வழிமுறைப்படுத்திய மனவளக்கலை SKY யோகா பயிற்சிகள் கிராம மக்கள் அனைவருக்கும் சென்று அடைய வேண்டும் என்பது குருவின் விருப்பம்.

மகானின் எண்ணத்தை செயல்படுத்தும் வகையில் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர் பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களால் **368**-வது கிராமமாக பெரியமத்தம்பாளையம் கிராமத்தில் கிராமிய சேவைத்திட்டம் துவங்கப்பட்டது.

இக்கிராமத்தில் 18-05-2025-ஆம் தேதியிலிருந்து **28-10-2025**-ஆம் நாள் வரை மனவளக்கலை யோகா பயிற்சிகளும், பலசிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் மூலம் கிராம மக்கள் அன்பும், அமைதியும் மற்றும் ஆரோக்கியமும் அடைந்துள்ளனர்.

## 3. திட்டத்தின் நோக்கமும் இலக்கும்

- நோயற்றவாழ்வு
- குடும்பஅமைதி
- முதியோரைபாதுகாத்தல்
- கல்வியில்மேன்மை
- சுற்றுப்புறசுகாதாரம்
- சமுதாயவிழிப்புணர்வு
- மதநல்லிணக்கம்
- மனிதநேயம்

**ஆரோக்கியமும் அமைதியும் மிக்க வேதாத்திரி கிராமம்**

## 4. பெரியமத்தம்பாளையம் கிராமத்தின் தொடக்கவிழா

*DR.R.Mogan, Vice President, PR, PNP MVKM Trust & PNP MVKM Trust Members அவர்களின் நிதி உதவியுடன் கோயம்புத்தூர் மண்டலம், பெரியநாயக்கன்பாளையம் மனவளக்கலை மன்றம் சார்பாக 25-04-2025-ஆம் தேதி உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.***SKM.** *மயிலானந்தன் அவர்களால் உலக சமுதாய சேவா சங்க கொடியேற்றத்துடன் மரம் நடுதல் விழாவுடனும்* பெரியமத்தம்பாளையம் *கிராமிய சேவைத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.*











<u>உடற்பயிற்சி, காயகல்பம், தவம், அகத்தாய்வு, பிரம்மஞானம் மற்றும் அருள்நிதியர் பயிற்சி</u>











## 5. மருத்துவ முகாம்

*24.06.2025 அன்று பெரியமத்தம்பாளையம் கிராமத்தில் VSP Medical Team மூலமாக மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் கிராம மக்கள் ஆண்கள்-12, பெண்கள்-18, மொத்தம்-30 அன்பர்கள் கலந்துகொண்டனர்.*




## 6. மனநல ஆலோசனை முகாம்

*27.092025 அன்று Dr.Ramesh அவர்களால் பெரியமத்தம்பாளையம் கிராமத்தில் மன நல ஆலோசனை முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் ஊர்பொதுமக்கள் ஆண்கள்-13, பெண்கள்-17, மொத்தம்-30 பேர் கலந்துகொண்டனர். தனிநபர் ஆலோசனை 6 அன்பர்களுக்கு வழங்கப்பட்டது.*




## 7. சுற்றுப்புற சுகாதார விழிப்புணர்வு முகாம்

*22.09.2025 அன்று பெரியமத்தம்பாளையம் கிராமத்தில் மண்டலம் மற்றும் அறக்கட்டளை பொறுப்பாளர்களால் கிராம மக்களுக்கு 110 மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.*




## 8. ஆரோக்கிய மேம்பாட்டு முகாம் (மது ஒழிப்பு முகாம்)

*22.09.2025 அன்று பெரியமத்தம்பாளையம் கிராமத்தில் மது ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் Mr.Jagadeesan and AAA Counsellors அவர்களால் சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் கிராம மக்கள் மொத்தம் 50 நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.*




## 9. மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி

*பெரியமத்தம்பாளையம் கிராமத்தில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் -இலவச தையல் கலை பயிற்சி துவக்கவங்கப்பட்டது. இலவச தையல் பயிற்சி மூலமாக 34 கிராமப் பெண்கள் பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர்.*






10. முதல் நிலை அகத்தாய்வு





11. இரண்டாம் நிலை அகத்தாய்வு





12. மூன்றாம் நிலை அகத்தாய்வு






## 13.அனுபவ உரை - Result Inference

| S.No. | Inference |
|---|---|
| 1 | 100% of the participants are satisfied with tailoring skill developed |
| 2 | Around 96% of the participants are benefitted with the exercises and leading a healthy life |
| 3 | 94% of the participants are able to remember things |
| 4 | 93% of the participants are out of the depression compared to before joining the program |
| 5 | 93% of the participants are able to eradicate their worries to maintain a healthy life |
| 6 | 93% Student Participants are good in studies and other Activities (School/College) |
| 7 | 93% (490) of the participants have made progress in family peace |
| 8 | Due to SKY Exercises and meditation-53 participants cured of Blood Pressure,53 participants cured of thyroid, 35 participants cured of migraine and headache, 35 participants cured of joint pain, 35 participants cure of Eye problem, 35 participants cured of asthma and breathing problem, 18 women participants cured of Menstrual problem (PCOD). |
| 9 | **100% of the participants are happy with the VSP Programme compared to only 45% before joining the program.** |

## Feedback Trend



வாழ்கவையகம் !! வாழ்கவையகம் !! வாழ்கவளமுடன்



A. ஜோதிகா
பெரியமத்தம்பாளையம்
கோவை - 19


என் பெயர் ஜோதிகா பெரியமத்தம்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் charactered accountant படித்து வந்து இருக்கிறேன் எனக்கு படிக்கும் பொழுது கவனசிதறல் அதிகமாக இருந்தது படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் இருந்தேன் அப்பொழுது நான் எனக்கு மனவளக்கலை யோகா பயிற்சியை பற்றி தெரிந்து அதில் கலந்து கொண்டேன், அந்த பயிற்சியை தினமும் செய்து வர படிப்பில் ஆர்வம் வர ஆரம்பித்தது. மனதிலும் அமைதி ஏற்பட்டது மகிழ்ச்சியாகவும் மேலும் நான் உடற்பயிற்சி, யோகா ஆகியவற்றை தொடர்ந்து செய்து வருகிறேன் அத்தொடு அகத்தாய்வு பயிற்சி செய்து எனது பிரச்சனைகளை நன்கு அறிந்து கொண்டு அதில் இருந்து மீண்டு வந்துக்கொண்டு இருக்கிறேன்

மேலும் நான் ஆழியார் சென்று பிரம்மஞானப் பயிற்சிலும் கலந்து கொண்டு உடற்பயிற்சி மற்றும் யோகா தவத்தைப் -பற்றி முழுமையாக தெரிந்துகொண்டேன் அங்கு சென்று 3 நாட்கள் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் அடைந்தேன்.

எனது முதல் நன்றியை வேதாத்திரி மகரிஷி ஐயா அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன் எங்கள் கிராமத்திற்கு மனவளக் -கலையை அறிமுகப்படுத்திய மற்றும் கற்றுக்கொடுத்த ஆசிரியர் -அவர்களுக்கு நன்றி

இப்படிக்கு
A. ஜோதிகா.

திருவாழ்க! குருவே துணை! வாழ்கவளமுடன்!



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குருவே துணை

பெயர் : M. சந்திரகலா

வயது : 48

ஊர் : பெரியமத்தம்பாளையம்.

என் பெயர் சந்திரகலா. நான் மத்தம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு முதுகுவலி காரணமாக, சிறிது நேரம் கூட குனிந்து எந்த வேலையும் செய்ய முடியாது. மனவளக்கலை பயிற்சியில் மகராசனம் பயிற்சியின் மூலமாக என் முதுகுவலி குறைந்து விட்டது. மேலும் பல பயிற்சிகளையும் கற்றுக் கொண்டதால் எனது உடல் நலமும், தியான பயிற்சியின் மூலம் எனது மன நலமும் பண்பட்டுவிட்டது. இந்த மனவளக்கலையை அளித்த உலக சமுதாய சேவா சங்கத்திற்கு நன்றி

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு

M. சந்திரகலா.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குருவே துணை



பெயர் : R. இந்திராணி


வயது : 46

ஊர் : பெரிய மத்தம்பாளையம்.

என் பெயர் இந்திராணி, நான் பெரிய மத்தம் பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நானும் என் கணவரும் கருத்து வேறுபாடு காரணமாக 15 வருடம் பிரிந்து இருந்தோம். எங்கள் ஊருக்கு மனவளக்கலை பயிற்சி வந்தது. அதில் தவமுறையில் என் கணவருக்கு வாழ்த்து கூறினேன். அவர் மனம் திருந்தி என்னிடம் வந்து சேர்ந்தார். நாங்கள் இப்போது மகிழ்ச்சியாக நன்றாக வாழ்கிறோம். இப்பயிற்சியை கொடுத்த மனவளக்கலை பயிற்சிக்கு நன்றி. வாழ்க வளமுடன்

இப்படிக்கு

R இந்திராணி.



வாழ்க வையகம்

வாழ்க வளமுடன்

பெயர் : T. யசோதா

வயது : 58

ஊர் : பெரிய மத்தம்பாளையம்
மனிச்சி கிராமம்

நான் கடந்த நான்கு மாதங்களாக அருள் தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களின் மனவளக்கலைப் பயிற்சியை பயின்று வருகிறேன். காயகல்ப பயிற்சியை தொடர்ந்து செய்ததால் எனக்கிருந்த piles பிரச்சனை இரண்டு மாதங்களிலேயே குணமாகி விட்டது.

மேலும் மகராசனப் பயிற்சியினால் முதுகெலும்பு வலி (L4, L5 disc problem) குறைந்து வருகிறது.

எனக்கு தீட்சை அளித்து முறையாக பயிற்சிகளையும், தவ முறைகளையும் கற்றுக்கொடுத்த ஆசிரியை திருமதி சியாமளா தேவி அவர்களுக்கும், ஆசிரியர் திரு சிவக்குமார் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு,

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

குருவே துணை



பெயர் : M. சந்திரகலா

வயது : 48

ஊர் : பெரியமத்தம்பாளையம்.

என் பெயர் சந்திரகலா. நான் மத்தம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு முதுகுவலி காரணமாக, சிறிது நேரம் கூட இன்றி எந்த வேலையும் செய்ய முடியாது. மனவளக்கலை பயிற்சியில் மகராசனம் பயிற்சியின் மூலமாக என் முதுகுவலி குறைந்து விட்டது. மேலும் பல பயிற்சிகளையும் கற்றுக் கொண்டதால் எனது உடல் நலமும், தியான பயிற்சியின் மூலம் எனது மனநலமும் பண்பட்டுவிட்டது. இந்த மனவளக்கலையை அளித்த உலக சமுதாய சேவா சங்கத்திற்கு நன்றி

வாழ்க வளமுடன்.

இப்படிக்கு

M. சந்திரகலா.

## 14. எதிர்காலத் திட்டங்கள்:

ஆரோக்கியமும், அமைதியும் மிக்க பெரியமத்தம்பாளையம் கிராமம், பெரியநாயக்கன்பாளையம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளையின் கீழ் தவமையமாக தொடர்ந்து செயல்படும். இத்தவமையத்தில் தினமும் மனவளக்கலை யோகா பயிற்சிகள் நடத்தப்படும். பயிற்சி எடுத்த அன்பர்கள் தொடர்ந்து பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதற்கும், பயிற்சி எடுக்காத அன்பர்கள் பயிற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும் இத்தவமையம் தனது ஒப்பற்ற சேவையை செயல்படுத்த உறுதுணையாக இருக்கும்.

## 15. வாழ்த்து:

*பெரியமத்தம்பாளையம் கிராமத்தை அமைதி கிராமமாகவும், ஆரோக்கிய கிராமமாகவும் மாற்றுவதற்க்கு கிராமிய சேவைத் திட்டத்தை வழிநடத்திக் கொண்டிருக்கும் உலக சமுதாய சேவா சங்கத் தலைவர், பத்மஸ்ரீ.அருள்நிதி.SKM.மயிலானந்தன் அவர்களுக்கும், இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு பொருள் உதவி DR.R.Mogan, Vice President, PR, PNP MVKM Trust & PNP MVKM Trust Members அவர்களுக்கும், இத்திட்டத்தை ஒருங்கிணைந்து நடத்தி கொடுத்தகோயம்புத்தூர் மண்டல பொறுப்பாளர்களுக்கும், பெரியநாயக்கன்பாளையம் மனவளக்கலை மன்றம் அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், பல்வேறு சிறப்பு முகாம்களை நடத்திக் கொடுத்த அனைத்து ஒருங்கிணைப்பாளர்களுக்கும், பயிற்சிகளை நடத்திக்கொடுத்த மனவளக்கலை கிராம ஆசிரியர்கள் Asst.Prof.M.Sivakumar & Asst.Prof.S.Shyamaladevi அவர்களுக்கும் சிறப்பு வகுப்புகள் நடத்திய ஆசிரிய பெருமக்களுக்கும், இத்திட்டம் முழுமையாக செயல்பட ஒருங்கிணைந்து சேவையாற்றிய VSP நிர்வாகக்குழு, வளர்ச்சிக்குழு மற்றும் சேவைக்குழு உறுப்பினர்களுக்கும், பயிற்சிகள் பெற்று பயனடைந்த ஊர்ப்பொது மக்கள் அனைவர்க்கும் உலக சமுதாய சேவா சங்கம் கிராமிய சேவைத்திட்ட இயக்குனரகத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.*

*உயர்ந்தோர்கள் ஒன்றுபட்டு, தாழ்ந்தோர்கள் தம்மை*
*உயர்த்துவதே தொண்டு நிலையங்கள் நோக்கம்.*
*உயர்ந்தநிலை அனைவருக்கும் கிட்டும் போதே*
*உலக சமாதனம் என்ற அமைதி உண்டாம்.*

*-வேதாத்திரி மகரிஷி*

*தொண்டாற்றி இன்பம் காண்போம்!* *நன்றி, வாழ்க வளமுடன்!*

*குருவின் சேவையில்*
*WCSC-VSP இயக்குனரகம்*
*அறிவுத்திருக்கோயில், ஆழியார்*